## முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

## O.S. No.620/2017

| | |
|---|---|
| சாட்சியின் வரிசை எண் | **பி.த.சா.1** |
| பெயர் | சபுராபி |
| க/பெ | அக்பர் அலி |
| வயது | 65 |
| ஊர் | கச்சிராப்பாளையம் ரோடு |
| வட்டம் | கள்ளக்குறிச்சி |
| மாவட்டம் | கள்ளக்குறிச்சி |
| தொழில் | சமையல் |

மேற்படி சாட்சி இன்று 08.06.2026 நீதிமன்றத்தில் ஆஜராகி உறுதிமொழி சட்டம் 1967 பிரிவு 6 ன் படி அமர்வு எழுத்தரால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியும் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதற்காக இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது . வழக்கு தொடர்வதற்கு முன்பாக எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அதற்கு பதில் கொடுத்தேனா என்றால்கொடுத்தேன் . அதில் என்ன சொல்லியிருக்கிறேன் என்றால் நான் பணம் வாங்கவில்லை என்று தான் சொல்லியிருக்கிறேன். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் ஒரு சுப்ரமணி என்பவர் தூண்டுதலின் பேரில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக சொல்லியதன் பேரில் அவர் மீது நடவடிக்கை எடுத்தோமா என்றால் எடுத்தோம் பணம் வாங்கவில்லை என்றுதான் சொன்னேன். என்ன நடவடிக்கை என்றால் நோட்டீஸ் அனுப்பினோம் அது

எப்போது என்றால் அது தெரியவில்லை . அந்த அறிவிப்பின் நகலையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை .சுப்ரமணியன் கடந்த 19.02.2011 என் மீது புகார் கொடுத்து கள்ளக்குறிச்சி காவல் நிலையத்தில் புகார் மனு ஏற்பு ரசீது வழங்கப்பட்டதாக சொல்லியுள்ள நிலையில் அதன் நகலை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை . காவல் நிலையத்தில் அவர் என்ன எழுதிகொடுத்து சென்றார் என்ற ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. வக்காலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆனால் பார்த்தால் என்னுடையது போல் இல்லை . எதிர் வழக்குரையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். வா.த.சா.ஆ 1 கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. பி.த.சா.ஆ 1 ல் உள்ளது கையெழுத்து என்னுடையது தான் . வா.த.சா.ஆ 1 மற்றும் பி.த.சா.ஆ 1 ல் உள்ள கையெழுத்து இரண்டும் ஒரே மாதிரி தான் உள்ளது என்றால் சரியல்ல . இரண்டு கையெழுத்தும் ஒரே கையெழுத்து தான் ஆனால் வேண்டுமென்றே பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல .09.02.2014 ம் தேதியில் ரூ . 2,50,000 வாதியிடம் கடனாக பெற்றுக்கொண்டு பிராமிசரிநோட்டு எழுதிகொடுத்துவிட்டு தற்போது பணம் வாங்கவில்ல என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியிடம் பெற்ற கடனை வட்டியுடன் திரும்ப செலுத்த கடமை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியமானது சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்பாக கையெழுத்து செய்தார்.

(Sd/-S. Muthu Murugan)
முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.